# வாழ்வில் தன்னம்பிக்கை தூவுங்கள்!



## வாழ்க்கையின் அப்லோடும் டவுன்லோடும்! 13

■ காம்கேர் கே.புவனேஸ்வரி

பணக்காரர்கள், ஏழைகள், படித்தவர்கள், படிக்காதவர்கள், நிறைய நண்பர்களை வைத்திருப்பவர்கள், தேர்ந்தெடுத்த சிலரை மட்டும் நட்பில் வைத்திருப்பவர்கள், வெளிநாட்டில் உள்ளவர்கள், தாய்மண்ணில் வாழ்பவர்கள்... இப்படி யாராக இருந்தாலும் கஷ்டங்கள், வருத்தங்கள், துக்கங்கள், தோல்விகள் அத்தனையும் எல்லோருக்கும் பொதுவானதே. அதுபோலவே, இவற்றால் உண்டாகும் வேதனைகளும் வலிகளும் அவமானங்களும் அத்தனை பேரையும் பாதிக்கச் செய்யும். மனவலிமை உள்ளவர்கள், இவற்றை எல்லாம் சமாளித்து எதிர்நீச்சல் போட்டு வாழ்கிறார்கள்; இல்லாதவர்கள் தடுமாறுகிறார்கள்.

குற்றவாளிகளும் கொலைகாரர்களும் கூட 'எப்படியாவது வாழ வேண்டும்' என ஆசைப்பட்டு, தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கு முட்டி மோதி முயற்சி செய்கிறார்கள். ஆனால், தங்கள் திறமையாலும் உழைப்பாலும் பெருமுயற்சியாலும் முன்னேறிய பலர், சட்டென வாழ்க்கையை முடித்துக்கொள்வதைக் காணும்போது வேதனை ஏற்படுகிறது. மனிதர்களின் மனநிலை குறித்த அச்சம் சூழ்கிறது.

'தன்னம்பிக்கை குறித்து அதிகம் பேசுபவர்களே தற்கொலை செய்துகொள்கிறார்கள்' என்று சிலர் எழுதியதைப் படிக்க நேர்ந்தது. தன்னம்பிக்கை என்பது ஒரு குணம், மனோபாவம். மென்மையானவன், முரடன், சோம்பேறி, சுறுசுறுப்பானவன் என ஒவ்வொருவருக்கும் பொதுவான குணாதிசயங்கள் இருப்பதைப் போல தன்னம்பிக்கை என்பது நம் பொதுவான குணங்களுக்கு மேல் அலங்கார அடுக்காக சேரும் ஒரு மனோபாவம்.

ஐஸ்க்ரீமில் டாப்பிங் செய்யப்பட்ட முந்திரி, பிஸ்தா, வேர்க்கடலை, பழங்கள் போல என்று வைத்துக்கொள்ளுங்களேன். கோப்பையில் உள்ள கடைசி துளி ஐஸ்க்ரீம் வரை இந்த டாப்பிங்கைக் கலந்து சாப்பிடும்போதுதான் ஐஸ்க்ரீம் சுவைக்கும். அவசரம் அவசரமாக டாப்பிங்கை மட்டும் தனியே அள்ளி எடுத்து சாப்பிட்டுவிட்டு, 'ஐஸ்க்ரீம் சுவையாக இல்லை' என்று சொல்ல முடியுமா?

அதுபோலதான் வாழ்க்கை என்ற நீண்ட பயணத்தில், ஒவ்வொரு மணித்துளியிலும் தன்னம்பிக்கை உடன் வர வேண்டும். அதை ஏதோ கிரீடம் போல, தேவையானபோது வைத்துக் கொண்டு, தேவையில்லாதபோது கழற்றி வைத்துவிடும் பொருளாகப் பயன்படுத்தினால் அதற்கு 'தன்னம்பிக்கை' என்றே அர்த்தம் அல்ல. மீட்டிங்கின்போது அணிந்துகொள்ளும் கோட் போல, விழாக் காலங்களில் அணிந்துகொள்ளும் பட்டுப் புடவை போல, நிகழ்ச்சி முடிந்ததும் கழற்றி வைத்துவிடும் ஒரு வஸ்திரம், அவ்வளவே!

வாழ்க்கை மீதான பிடிப்புக்கு தன்னம்பிக்கை மிக அவசியம். 'அடுத்த வேளை சாப்பாடு கிடைக்குமா, கிடைக்காதா' என்றே தெரியாமல் ஏழ்மையில் வாழ்ந்து வருபவர்களை உற்று நோக்குங்கள். அவர்களால் என்ன முடிகிறதோ அதைச் செய்கிறார்கள். அன்றன்றைய மகிழ்ச்சி, துக்கம், சோகம் ஆகியவற்றை அன்றன்றைய இரவு உறக்கத்தில் கரைக்கிறார்கள். இவர்களுக்கு தங்களை இயக்குவது 'தன்னம்பிக்கை' என்றெல்லாம் தெரியாது. விதிக்கப்பட்ட வாழ்க்கை. வாழ வேண்டும். இது மட்டுமே அவர்களுக்குத் தெரியும்.

இந்த அளவு பற்றற்ற மனநிலைக்கு வர முடியாவிட்டாலும், ஐஸ்க்ரீம் டாப்பிங் போல தன்னம்பிக்கையை நம் ஒவ்வொரு செயலிலும் தூவிக்கொள்வதன் மூலம் வாழ்க்கையை வாழ்ந்துவிடலாம் என்றுதான் நினைக்கிறேன். டாப்பிங்கை தனியே சாப்பிடுகிறீர்களா, அல்லது கடைசி துளி ஐஸ்க்ரீம் வரை டாப்பிங்கை சேர்த்து சுவைத்து சாப்பிடுகிறீர்களா என்பதில்தான் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

நம் எண்ணங்களை நாம்தான் வடிவமைக்கிறோம். எல்லாம் நல்லபடியாகப் போகும்வரை நம் எண்ணம் நம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். சூழல் எல்லை மீறும்போது, நம் எண்ணங்களும் நம் கட்டுப்பாட்டை இழக்கும். ஆக, சூழலை எல்லை மீறாமல் வைத்திருப்பதில்தான் சூட்சுமம் உள்ளது.

ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். எந்த சூழலிலும் அதை மறக்காமல் இருக்க வேண்டும். ஒருவர் தற்கொலை செய்துகொள்வதால், அவரைச் சுற்றி இயங்குகின்ற உலகில் எந்த மாற்றமும் நிகழப் போவதில்லை. அவரின் ரத்த சொந்தங்களுக்கு வேண்டுமானால் சில நாட்கள் அதன் தாக்கம் இருக்கும். அப்பா இறந்த செய்தியை காலையில் ஃபேஸ்புக் ஸ்டேட்டஸில் போட்டுவிட்டு, மாலையில் தன் நண்பரின் ஃபேஸ்புக் புரொஃபைல் புகைப்படத்துக்கு 'லவ்லி' என பின்னூட்டம் போட்டு காலத்தைக் கடந்து சென்றுகொண்டிருக்கும் பலரைப் பார்த்திருக்கிறேன். இவ்வளவுதான் உலகம்.

சென்ற மகளிர் தினத்தன்று எனக்கு விருது அளிப்பதற்காக ஒரு சேவை நிறுவனம் தொடர்புகொண்டது. அவர்களின் ஆன்மிக இலக்கிய சேவை பற்றி அறிமுகம் செய்துகொண்டார்கள். என்னைப் போல் 10 பெண்களுக்கு விருது கொடுப்பதாகச் சொன்னவர்கள், என்னைப் பற்றிய தகவல்களை அனுப்பி வைக்கச் சொன்னார்கள். அனுப்பியிருந்தேன்.

சில தினங்களில் ஒரு பிரமாண்டமான அழைப்பிதழ் அனுப்பினர். அதில் சாதனைப் பெண்களின் புகைப்படங்களுடன் அவர்கள் பற்றிய தகவல்களையும் அச்சிட்டிருந்தார்கள். பத்து பக்கங்களுக்கும் குறையாத அழைப்பிதழ். ஊர் முழுக்க அதை விளம்பரப்படுத்தி இருந்தார்கள். அதில் பெண்களின் புகைப்படங்களுக்கு கீழே அவரவர் துறை சார்ந்த சாதனைகளைச் சொல்லாமல், அவர்களின் சொந்த வாழ்க்கை குறிப்புகளை வெளியிட்டிருந்தார்கள்.

அந்த நிறுவனத்தைத் தொடர்புகொண்டு, ''இப்படி பர்சனல் வாழ்க்கை விவரங்களை அச்சடித்தால், இதுவே அவர்களுக்குத் தொந்தரவாக அமையுமல்லவா'' என பொறுமையாக எடுத்துச் சொன்னேன். ஆனால் அவர்கள் அதை சரியான கோணத்தில் எடுத்துக்கொள்ளாமல், ஏதோ அந்த விருது அளிப்பதையே பெரிய உதவி போல கர்வத்துடன் பேசினர். நான் அந்த விருதையே புறக்கணித்தேன். இதை என் நட்பு வட்டத்தில் உள்ள ஒரு சிலருடன் பகிர்ந்துகொண்டேன். அவர்களும், ''அடக் கொடுமையே! இப்படியெல்லாம் கூட இருக்கிறார்களே... பெண்களுக்கு விருதுகொடுக்கிறேன் என நினைத்து அவர்களுக்கு கஷ்டம் கொடுக்கிறார்களே'' என்றெல்லாம் வருந்தினர். ஆனால், இந்த வருட பெண்கள் தினத்தில், அதே அமைப்பிலிருந்து அவர்கள் விருது பெற்றுள்ளார்கள்.

இவ்வளவுதான் உலகம்! 'உன் கஷ்டம் உன்னோடு... என்னை அது ஒரு துளியும் பாதிக்கப் போவதில்லை. எனக்கு வரும்போது நான் பார்த்துக்கொள்கிறேன்' என்ற மனோபாவம் உள்ள உலகம். இதில், ஒருவர் வாழ்க்கையை முடித்துக்கொள்வதால் எதுவுமே மாறப்போவதில்லை.

நமக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்துதான் பார்ப்போமே. வெற்றி, தோல்வி என பிரித்துப் பார்க்க வாழ்க்கை ஒன்றும் பந்தயம் அல்ல. வாழ்க்கை ஒரு பயணம். நாம் அதில் ஒரு பயணியாக பயணிக்க வேண்டும், அவ்வளவே! ●

### இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!

வாழ்க்கைப் பயணத்தில் ஒவ்வொரு மணித்துளியிலும் தன்னம்பிக்கை உடன் வர வேண்டும். தேவையானபோது வைத்துக் கொண்டு, தேவையில்லாதபோது கழற்றி வைத்தால், அதற்கு 'தன்னம்பிக்கை' என்றே அர்த்தம் அல்ல!



காம்கேர் கே.புவனேஸ்வரி